# வாழ்வைப் பலியாய் மாற்ற வந்தேன்

வாழ்வைப் பலியாய் மாற்ற வந்தேன்
என்னையே ஏற்றிடுவாய்
முழு மனதுடனே கையளிக்கின்றேன்
காணிக்கை ஏற்றிடுவாய் ( 2 )

**1)**
கோதுமை மணியும் திராட்சைக் கனியும்
புது உரு பெறுவது போல் ( 2 )
அன்பும் அமைதியும் நீதியுமே
மனிதனில் மலர்ந்திட
உயிர் தருவாய் ( 2 )

**2)**
நான் வாழ பிறரும் பிறர் வாழ நானும்
தேவை என்றுணர்ந்தேன் ( 2 )
சமத்துவ சோதர நோக்குடனே
புது யுகம் காண்போம் அகத்தினிலே( 2 )